# ஒன்பதாம் வகுப்பு மாணவர்களுக்கு விதிவிளக்குமுறை மூலம் கற்பிப்பதன் வாயிலாக சந்திப்பிழை இல்லாமல் எழுதும் திறனை மேம்படுத்தல்

**செயலாய்வு அறிக்கை**

**சமர்ப்பணம்**

**இயக்குநர், மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம், சென்னை – 600 006**


**ஆய்வாளர்**

**கி.சௌந்தரராஜன்,**

**விரிவுரையாளர்**


செயலாய்வு - மார்ச் **2024**


**மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம்,**

**முனைஞ்சிப்பட்டி - 627 355**

**திருநெல்வேலி மாவட்டம்.**

# செயலாய்வு

| | | |
|---|---|---|
| ஆய்வுத்தலைப்பு | : | ஒன்பதாம் வகுப்பு மாணவர்களுக்கு விதிவிளக்கு முறை மூலம் கற்பிப்பதன் வாயிலாக சந்திப்பிழை இல்லாமல் எழுதும் திறனை மேம்படுத்தல் |
| ஆய்வாளர் | : | கி.சௌந்தரராஜன்<br>விரிவுரையாளர்,<br>மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம்,<br>முனைஞ்சிப்பட்டி - 627 355<br>திருநெல்வேலி மாவட்டம். |
| சமர்ப்பணம் | : | இயக்குநர்,<br>மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம்,<br>சென்னை - 600 006 |
| செலவுத்தொகை | : | ரூபாய். |
| சமர்பித்த நாள் | : | - |
| ஆய்வாளர் கையொப்பம் | : | |

**முனைவர். பி. கோல்டா கிரேனா ராஜாத்தி M.Sc., M.Ed., M.Phil., Ph.d**

**முதல்வர்,**

**மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம்,**

**முனைஞ்சிப்பட்டி - 627355**

**திருநெல்வேலி மாவட்டம்.**

---

## <u>சான்றிதழ்</u>

**ஒன்பதாவது வகுப்பு மாணவர்களுக்கு விதிவிளக்கு முறை மூலம் கற்பிப்பதன் வாயிலாக சந்திப்பிழை இல்லாமல் எழுதும் திறனை மேம்படுத்தல்** என்னும் தலைப்பிலான இச்செயலாய்வை கி.சௌந்தரராஜன், விரிவுரையாளர், மாவட்ட ஆசிரியர் கல்வி பயிற்சி நிறுவனம், முனைஞ்சிப்பட்டி, திருநெல்வேலி மாவட்டம் என்பார் செய்து முடித்துள்ளார். மேற்படி செயலாய்வை அவர் முனைஞ்சிப்பட்டி மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவன முதல்வரிடம் சமர்ப்பிப்பதற்காகச் செய்து முடித்துள்ளார் எனச் சான்றிதழ் வழங்கப்படுகிறது.

முனைஞ்சிப்பட்டி — முதல்வர் கையொப்பம்

28.03.2024 — (முனைவர்.பி.கோல்டா கிரேனா ராஜாத்தி)

# நன்றியுரை

- இச்செயலாய்வினைச் சிறப்பாகச் செய்ய அனுமதியளித்த சென்னை - 6 மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவன இயக்குநருக்கு நன்றி.
- இச்செயலாய்வினைச் சிறப்பாக மேற்கொள்ள உதவிய முனைஞ்சிப்பட்டி, மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவன முதல்வருக்கு நன்றி.
- இவ்வாய்வுத் தலைப்பிற்கு ஒப்புதலளித்த தேர்வுக் குழு உறுப்பினர்களுக்கு நன்றி.
- இவ்வாய்வை பள்ளியில் நடைமுறைப்படுத்த உதவிய தென்காசி மாவட்டம், மேலநீலிதநல்லூர் ஒன்றியம், கூவாச்சிப்பட்டி, அரசு உயர்நிலைப்பள்ளித் தலைமையாசிரியர், ஆசிரியர்கள், மாணவர்கள் ஆகிய அனைவருக்கும் நன்றி

# பொருளடக்கம்


| வ.எண் | தலைப்பு | பக்கம் |
|---|---|---|
| 1. | முன்னுரை | 1 |
| 2. | ஆய்வுத்தலைப்பு | 1 |
| 3. | பிரச்சனையை வரையறுத்தல் | 1 |
| 4. | ஆய்வின் தேவையும் பின்புலமும் | 2 |
| 5. | ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டோர் | 3 |
| 6. | ஆய்வு முறைகள் | 3 |
| 7. | பிரச்சனைக்கான உத்தேசக் காரணங்கள் | 3 |
| 8. | பிரச்சனைக்கான உத்தேசத் தீர்வுகள் | 3-4 |
| 9. | ஆய்வுக்கருவி | 4 |
| 10. | வினளவுறு செயல்கள் | 4-43 |
| 11. | முடிவுகளைப் பகுத்தாய்தல் | 44 |
| 12. | ஆய்வு முடிவு | 48 |
| 13. | ஆய்வுச் சுருக்கம் | 48 |
| 14. | நிழற்படங்கள் | 49-51 |
| 15. | துணைநூற்பட்டியல் | 52 |
| 15. | முன்/பின் தேர்வு வினாத்தாள் | 53-54 |
| 16. | செயலாய்வுச் சுருக்கம் | 55-57 |

## 1. முன்னுரை

தமிழ் மிகப்பழமையான மொழி. இம்மொழியில் பேச்சுமொழிக்கும் எழுத்து மொழிக்கும் மிகுந்த வேறுபாடுகள் உள்ளன. வட்டார வழக்குகளின் தாக்கங்களும் உள்ளன. ஒருவரின் பேச்சுமொழியில் உள்ள பிழைகளை யாரும் கண்டு கொள்வதில்லை. ஆனால் எழுத்து மொழியில் உள்ள பிழைகள் ஒருவரின் கல்வித் தகுதியைக் கேள்விக்குறியாக்கும். ஊடகங்களில் வரும் செய்திகளிலும் பல்வேறு பிழைகள் உள்ளன. தாய்மொழியைப் பிழையில்லாமல் எழுதுவது ஒவ்வொருவரின் கடமையாகும்.

## 2. ஆய்வுதலைப்பு

ஒன்பதாம் வகுப்பு மாணவர்களுக்கு விதி விளக்குமுறை மூலம் கற்பிப்பதன் வாயிலாக சந்திப்பிழை இல்லாம் எழுதும் திறனை மேம்படுத்தல்.

## 3. பிரச்சனையை வரையறுத்தல்

மாணவர்கள் எழுதும் போது பல்வேறு பிழைகள் ஏற்படுவது உண்டு. அவைகள் அனைத்தையும் பயிற்சிகள் மூலம் குறைத்துக் கொள்ள முடியும். ஆனால் சந்திப்பிழைகளுக்காகப் பாடநூல்களில் கொடுக்கப்பட்டுள்ள பயிற்சிகள் போதுமானவையாக இல்லை. மேலும் ஆசிரியர்களிடையேயும் இப்பிழைகள் பற்றி முழுமையான புரிதல் இல்லை. தற்காலத்தில் வெளிவரும் நாளிதழ்கள், அறிவிப்புப் பலகைகள், துண்டு அறிக்கைகள் ஆகிய எல்லாவற்றிலும் சந்திப்பிழைகள் மலிந்தே காணப்படுகின்றன. கற்றவர்கள் மொழியைத் தவறில்லாமல் பயன்படுத்த வேண்டும். சந்திவகைகள் பல உள்ளன. அவற்றுள் வல்லொற்றுகளான க, ச, த, ப ஆகியவை மிகுமிடங்களும் மிகாவிடங்களுமே இவ்வாய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது.

## 4. ஆய்வின் தேவை

தொடக்கநிலை மாணவர்கள் எழுதும் போது குறில், நெடில் பிழைகள், மயங்கொலிப் பிழைகள், எழுத்துப்பிழைகள், சந்திப்பிழைகள் ஆகியவை ஏற்படுகின்றன. உயர்நிலைப்பள்ளியில் பயிலும்போது ஓரளவு மற்றப் பிழைகள் இல்லாமல் எழுதக் கற்றுக் கொள்கின்றனர். ஆனால்

பெரும்பாலான உயர்நிலைப்பள்ளி மாணவர்கள் சந்திப்பிழை விடுகின்றனர். சந்திப்பிழைகளால் பொருள் குழப்பம், பிரித்துக்காட்டல் ஆகியன நிகழ்கின்றன. பள்ளிப் பாடங்களில் சந்திப்பிழைகள் இல்லாமல் எழுதுவதற்கு சில பயிற்சிகளும் நூற்பாக்களும் கொடுக்கப்பட்டுள்ளன. அவை போதுமானவையாக இல்லை. போட்டித் தேர்வுகளில் சந்திப்பிழை இல்லாத தொடரைத் தெரிவு செய்யும் வகையில் வினாக்கள் கேட்கப்படுகின்றன. எனவே சந்திப்பிழைகள் இல்லாமல் எழுவதற்குரிய இலக்கண விதிகள், காரணகாரியத் தொடர்புகள், இவை குறித்த அறிஞர்களின் விளக்கங்கள் ஆகியவற்றை கற்பிப்பது அவசியமாகிறது.

## 4. ஆய்வின் பின்புலம்

ஆய்வாளர் தென்காசி மாவட்டம் மேலநீலித நல்லூர் ஒன்றியத்திலுள்ள கூவாச்சிபட்டி அரசு உயர்நிலைப் பள்ளியைக் கடந்த நான்கு மாதங்களுக்கு முன்னர் ஒரு நாள் பார்வையிட்டார். அப்போது ஒன்பதாவது வகுப்பு மாணவர்களின் குறிப்பேடுகள், விடைத்தாள்கள் ஆகியவற்றில் சந்திப்பிழைகள் மலிந்திருப்பதைக் கண்டார். இதனால் சந்திப்பிழைகள் இல்லாமல் எழுதப் பயிற்சி கொடுக்க வேண்டியதன் அவசியத்தை உணர்ந்தார். எனவே மேற்படி பள்ளியிலுள்ள ஒன்பதாம் வகுப்பு மாணவர்களுக்கு சந்திப்பிழை இல்லாமல் எழுதும் திறனை மேம்படுத்துவதற்காக இச்செயலாய்வு மேற்கொள்ளப்பட்டது.

## 5. ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டோர்

தென்காசி மாவட்டம், மேலநீலிதநல்லூர் ஒன்றியத்திலுள்ள கூவாச்சிபட்டி அரசு உயர்நிலைப்பள்ளி மாணவ, மாணவியர் 32 பேர்.

## 6. ஆய்வு முறைகள்

இவ்வாய்வில் விதிவிளக்கு முறையில் வல்லொற்று மிகுமிகுடங்களையும் மிகாவிடங்களையும் கற்பிக்கத் தீர்மானிக்கப்பட்டது. மேலும் காரண காரியத் தொடர்புகள், அறிஞர்களின் விளக்கங்கள் ஆகியவற்றைக் கூடுதலாக தருவதென முடிவு செய்யப்பட்டது. முன்தேர்வு,

பின்தேர்வு, மதிப்பெண் சராசரி ஆகியவை மூலம் மாணவர்களின் அடைவை மதிப்பிடுவது எனத் தீர்மானிக்கப்பட்டது.

## 7. பிரச்சனைக்கான உத்தேசக் காரணங்கள்

1. புணர்ச்சி இலக்கணம் பற்றிய அறிவின்மை.
2. பள்ளிப் பாடநூல்களில் சந்திப்பிழைகள் தொடர்பாக கொடுக்கப்பட்டுள்ள செய்திகள் போதுமானவையாக இல்லாதிருத்தல்.
3. ஆசிரியர்களுக்கு இலக்கணம் பற்றிய புரிதல் இல்லாதிருத்தல்.
4. மாணவர்களின் வாசிப்புப் பழக்கமின்மை.
5. சொற்சேர்க்கை தொடர்பான காரண காரியமுறைத் தொடர்புகளை அறியாதிருத்தல்.
6. தமிழ் அறிஞர்களின் விளக்கங்களைப் படிக்காதிருத்தல்.
7. நன்னூல், தொல்காப்பியம் ஆகிய நூல்களில் கூறப்பட்டுள்ள வலிமிகுமிடம், வலிமிகாஇடம் பற்றி அறியாதிருத்தல்.
8. பெற்றோரின் அக்கறையின்மை.

## 8. பிரச்சனைக்கான உத்தேசத் தீர்வுகள்

1. இலக்கண நூற்பாக்களை விதிவிளக்கு முறையில் நடைமுறை எடுத்துக்காட்டுகளுடன் அறிந்து கொள்ளல்.
2. சந்தி மிகுவதால் பொருள் மாறுபடுமிடங்களைச் சுட்டிக்காட்டல்.
3. சந்தி மிகாததால் பொருள் பிரித்துக் காட்டப்படும் இடங்களை விளக்குதல்.
4. எவ்வெவற்றில் வல்வெலாற்றுகள் மிகும் எவ்வெவற்றில் வல்லொற்றுகள் மிகா என்பதைத் தொடர்புபடுத்திக் கற்பித்தல்.
5. விதி விலக்காக வரும் இடங்களைத் தக்க எடுத்துக்காட்டுகளுடன் விளக்குதல்.

## 9. ஆய்வுக்கருவி

மாணவர்களின் முன்னறிவைச் சோதிப்பதற்கு அடைவுத் தேர்வுக்குரிய வினாத்தாள் தயாரிக்கப்பட்டது. வினாத்தாள் இருபத்தைந்து மதிப்பெண்களைக் கொண்டது. வினாக்கள் வல்லொற்று மிகுமிடத்தையும், மிகாவிடத்தையும் கண்டறியும் வகையில் பலவுள் தெரிவாக அமைக்கப்பட்டன. முன்தேர்வு மற்றும் பின்தேர்வுக்கு ஒரே வினாத்தாள்

பயன்படுத்தப்பட்டது. இருபத்து ஐந்து மதிப்பெண்களுக்குத் தேர்வு நடத்தப்பட்டு நூறு விழுக்காட்டிற்குக் கணக்கிடப்பட்டது

## 10. விளைவுறு செயல்கள்

### 10-1 வல்லொற்று மிகுவதால் பொருள் மாறுபடுமிடங்கள்

1. முருகன் வேலை கொடுத்தான் - பணி கொடுத்தல்
   முருகன் வேலைக் கொடுத்தான் - ஆயுதத்தைக் கொடுத்தல்
2. ஔவை கடலை சாப்பிட்டார் - நிலக்கடலை உண்ணுதல்
   அகத்தியர் கடலைச் சாப்பிட்டார் - கடல் நீர் முழுவதையும் குடித்தல்
3. தங்க கோவில் - கோவிலில் தங்குவதற்குரிய இடம்
   தங்கக் கோவில் - தங்கத்தினால் ஆகிய கோவில்
4. அவன் கை குட்டையாக இருந்தது - கையின் நீளம் குறைவு
   அவனிடம் கைக்குட்டை இருந்தது - சிறுதுணி இருந்தது.
5. அவன் தலை கனமாக இருப்பதாகக் கூறினான் - தலைவலி
   அவன் தலைக்கனமாக இருப்பதாகப் பிறர் கூறினர் - செருக்கு

### 10-2 வல்லொற்று மிகாததால் பொருள்கள் ஒன்றாகவும் வெவ்வேறாகவும் காட்டப்படுதல்

1. அரிசி சோறு - அரிசியும் சோறும்
   அரிசிச் சோறு - அரிசியினால் ஆக்கப்பட்ட சோறு
2. பருப்பு சாம்பார் - பருப்பும், சாம்பாரும்
   பருப்புச் சாம்பார் - பருப்பினால் ஆக்கப்பட்ட சாம்பார்
3. அரிசி கடை - அரிசியைக் கடைந்து மாவாக்கு
   அரிசிக்கடை - அரிசியை விற்கும் கடை
4. பட்டபடிப்பு - பட்டுப்போன, நின்று போன படிப்பு
   பட்டப்படிப்பு - பட்டம் பெறுவதற்கான படிப்பு

### 10-3 சந்தி மிகுவதால் / மிகாததால் நேர் பொருளாகவும் வினைத்தொகைப் பொருளாளகவும் மாறுதல்

1. நகர் பேருந்து - நகர்ந்த, நகருகின்ற, நகரும் பேருந்து
   நகர்ப் பேருந்து - நகரில் ஓடுகின்ற பேருந்து
2. தொலை தொடர்பு - தொலைந்த, தொலைகின்ற தொலையும் தொடர்பு

| | | |
|---|---|---|
| தொலைத்தொடர்பு | - | தொலைவில் உள்ளவர்களுடன் கொள்ளும் தொடர்பு |
| 3. புனைபெயர் | - | புனைந்த, புனைகின்ற, புனையும் பெயர் |
| புனைப்பெயர் | - | தனது உண்மைப் பெயரை விட்டு விட்டு வேறு ஒரு பெயரை (புனைவாக) வைத்துக்கொள்ளல். |

**<u>10-4 வல்லெழுத்து மிகுமிடங்கள்</u>**

1. **சுட்டெழுத்துகளின் பின் வல்லினம் மிகும்**

அ, இ, உ ஆகிய இவ்வெழுத்துக்களின் பின் க, ச, த, ப வருமொழியின் முதலாகவரின் வலிமிகும் 'க' என்றால் 'க' முதல் 'கௌ' வரையிலுள்ள எழுத்துக்களைக் கொள்ள வேண்டும். இவ்வாறே ச, த, ப என்னும் எழுத்துகளுக்கும் கொள்ள வேண்டும்.

(எ.டு)

| | | | | |
|---|---|---|---|---|
| அ | + | காலம் | = | அக்காலம் |
| அ | + | குதிரை | = | அக்குதிரை |
| அ | + | செய்தி | = | அச்செய்தி |
| அ | + | தெரு | = | அத்தெரு |
| அ | + | பொருள் | = | அப்பொருள் |
| அ | + | காளை | = | அக்காளை |
| அ | + | கிளை | = | அக்கிளை |
| இ | + | கதவு | = | இக்கதவு |
| இ | + | சிலை | = | இச்சிலை |
| இ | + | புகழ் | = | இப்புகழ் |
| இ | + | பருவம் | = | இப்பருவம் |
| இ | + | தலை | = | இத்தலை |
| உ | + | பக்கம் | = | உப்பக்கம் |
| உ | + | பால் | = | உப்பால் |

2. **வினா எழுத்துக்குப் பின் சந்தி மிகும். 'எ' என்ற வினா எழுத்துக்குப் க,ச,த,ப முதலெழுத்துகளாகவரின் வலி மிகும்.**

(எ.டு)

எ + கேள்வி = எக்கேள்வி

எ + கடவுள் = எக்கடவுள்

எ + சொல் = எச்சொல்

எ + தலைவர் = எத்தலைவர்

எ + புலவர் = எப்புலவர்

எ + பக்கம் = எப்பக்கம்

எ + தளிர் = எத்தளிர்

3. **சுட்டு விரிச்சொற்களை அடுத்தும் வினா எழுத்தை அடுத்தும் வல்லினம் மிகும். சுட்டு விரிச் சொற்களான அந்த, இந்த என்ற சொற்களுக்கு அடுத்து வருமொழியாக க, ச, த, ப வரின் வல்லினம் மிகும். வினாச்சொல்லின் விரிவாக வரும் எந்த என்ற சொல்லின் பின்னும் மேற்கண்டவாறு வல்லினம் மிகும்.**

(எ-டு)

அந்த + காலம் = அந்தக்காலம்

அந்த + செய்தி = அந்தச்செய்தி

அந்த + பணம் = அந்தப்பணம்

அந்த + கை = அந்தக்கை

அந்த + தெய்வம் = அந்தத்தெய்வம்

இந்த + சிலம்பு = இந்தச்சிலம்பு

இந்த + தரை = இந்தத்தரை

இந்த + பொருள் = இந்தப்பொருள்

இந்த + கேள்வி = இந்தக்கேள்வி

இந்த + காலம் = இந்தக்காலம்

இந்த + சிறை = இந்தச்சிறை

எந்த + சொல் = எந்தச்சொல்

எந்த + கயவன் = எந்தக்கயவன்

எந்த + தலை = எந்தத்தலை

எந்த + பணம் = எந்தப்பணம்

எந்த + பக்கம் = எந்தப்பக்கம்

எந்த + தெரு = எந்தத்தெரு

4. **அங்கு, இங்கு, எங்கு, யாங்கு ஆகிய சுட்டு, வினா விரிச்சொற்களை அடுத்தும் அங்கு, ஈங்கு என்ற இடப்பொருளைக் குறிக்கும் சொற்களை அடுத்தும் வல்லினம் மிகும்.**

(எ.டு)

அங்கு + கண்டான் = அங்குக் கண்டான்

அங்கு + குடியிருந்தான் = அங்குக் குடியிருந்தான்

இங்கு + சேர்ந்தேன் இங்குச் சேர்ந்தான்

இங்கு + சென்றான் = இங்குச் சென்றான்

அங்கு + தேடினேன் = அங்குத் தேடினேன்

ஈங்கு + சென்றார் = எங்குச் சென்றார்

5. **இடப்பொருள் தரும் ஆண்டு, ஈண்டு, யாண்டு என்னும் சொற்களின் பின் க, ச, த, ப வருமொழி முதலெழுத்துகளாகவரின் வல்லினம் மிகும்.**

(எ-டு)

ஆண்டு + காண் = ஆண்டுக் காண்

ஆண்டு + சென்றேன் = ஆண்டுச் சென்றேன்

ஈண்டு + கேள் = ஈண்டுக் கேள்

யாண்டு + போனாய் = யாண்டுப் போனாய்

யாண்டுக் + கொடுப்பார் = யாண்டுக் கொடுப்பார்

6. **அப்படி, இப்படி, எப்படி என்னும் சொற்களை அடுத்து வருமொழி முதலெழுத்துகளாக க,ச,த,ப வரின் வல்லினம் மிகும்.**

(எ-டு)

அப்படி + செய் = அப்படிச் செய்

அப்படி + பேசு = அப்படிப் பேசு

இப்படி + சொன்னான் = இப்படிச் சொன்னான்

இப்படி + பார் = இப்படிப் பார்

எப்படி + பாடினார் = எப்படிப் பாடினார்

எப்படி + பாடினார் = எப்படிப் பாடினார்

எப்படி + பாடினார் = எப்படிப் பாடினார்

எப்படி + பேசினான் = எப்படிப் பேசினான்

7. **அவ்வகை, இவ்வகை, எவ்வகை, ஆகிய சொற்களை அடுத்து வருமொழி முதலெழுத்துக்களாக க, ச, த, ப வரின் வல்லினம் மிகும்.**

(எ-டு)

அவ்வகை + செடி = அவ்வகைச் செடி

அவ்வகை + துணிகள் = அவ்வகைத் துணிகள்

இவ்வகை + பூக்கள் = இவ்வகைப் பூக்கள்

இவ்வகை + காவல் = இவ்வகைக் காவல்

எவ்வகை + கொடி = எவ்வகைக் கொடி

எவ்வகை + பாடல் = எவ்வகைப் பாடல்

8. **அத்துணை, இத்துணை, எத்துணை என்ற சொற்களுக்கு அடுத்து வருமொழிகளாக க,ச,த,ப வல்லினம் மிகும்.**

(எ-டு)

அத்துணை + பெரிய = அத்துணைப் பெரிய

அத்துணை + பாடல்கள் = அத்துணைப் பாடல்கள்

இத்துணை + சிறிய = இத்துணைச் சிறிய

எத்துணை + படங்கள் = எத்துணைப் படங்கள்

எத்ததுணை + காட்சிகள் = எத்துணைக் காட்சிகள்

9. **அவ்வித, இவ்வித, எவ்வித என்ற சொற்களுக்கு அடுத்து வருமொழிகளாக க, ச, த, ப வரின் வல்லினம் மிகும்.**

(எ-டு)

அவ்வித + கலை = அவ்விதக் கலை

இவ்வித + சாலை = இவ்விதச் சாலை

எவ்வித + தாக்கம் = எவ்விதத் தாக்கம்

எவ்வித + பரிசு = எவ்விதப் பரிசு

10. **அதற்கு, இதற்கு, தெற்கு என்ற சொற்களுக்கு அடுத்து வருமொழிகளாக க, ச, த, ப வரின் வல்லினம் மிகும்.**

(எ-டு)

அதற்கு + காட்டு = அதற்குக் காட்டு

இதற்கு + சொல் = இதற்குச் சொல்

எதற்கு + தந்தாய் = எதற்குத் தந்தாய்

எதற்கு + பார்த்தாய் = எதற்குப் பார்த்தாய்

எதற்குக் கேட்கிறாய் வரி?

இதற்குச் சிறிதும் கவலைப்படத் தேவையில்லை.

11. **முன்னர், பின்னர் என்ற சொற்களுக்குப் பின் வருமொழிகளாக க, ச, த, ப எழுத்துகள் வரின் வல்லினம் மிகும்.**

(எ-டு)

முன்னர் + கண்டேன் = முன்னர்க் கண்டேன்

பின்னர் + பேசுவேன் = பின்னர்ப் பேசுவேன்

பின்னர் + பார்ப்போம் = பின்னர்ப் பார்ப்போம்

எனக்கு முன்னர்ப் பேசியவர் சிறப்பாக உரையாற்றினார் அவையில் உறுப்பினர்களின் கூச்சலுக்குப் பின்னர்ப் பேரவை ஒத்தி வைக்கப்பட்டது.

12. **இனி, தனி என்ற சொற்களுக்குப் பின்னர் வருமொழி முதலெழுத்துக்களாக க, ச, த, ப வரின் வல்லினம் மிகும்.**

இனி + காண்போம் = இனிக்கா ண்போம்

இனி + பாடமாட்டேன் = இனிப் பாடமாட்டேன்

இனி + செய்யாதே = இனிச் செய்யாதே

தனி + சிறப்பு = தனிச்சிறப்பு

தனி + பிறவி = தனிப்பிறவி

தனி + கேள்வி = தனிக்குடித்தனம்

தனி + பண்பு = தனிப்பண்பு

13. **ஆய், போய் என்னும் எச்சச் சொற்களுடன் புணரும் வல்லினம் மிகும்.**

(எ-டு)

போய் + சொன்னார் = போய்ச் சொன்னார்

போய் + தேடினார் = போய்த் தேடினார்

சொன்னதாய் + சொல் = சொன்னத்தாய்ச் சொல்

ஒழுங்காய் + பாடி = ஒழுங்காய்ப் படி

மெதுவாய் + காட்டு = மெதுவாய்க் காட்டு

வந்ததாய் + கூறு = வந்ததாய்க்கூ று

மகிழ்ச்சியாய் + பேசினார் = மகிழ்ச்சியாய்ப் பேசினார்

14. **மற்ற, மற்று, மற்றை ஆகிய சொற்களையடுத்து வருமொழியில் க, ச, த, ப ஆகிய எழுத்துக்களைக் கொண்ட சொற்கள் வரும்போது வல்லினம் மிகும்.**

(எ-டு)

மற்ற + பதிவுகள் = மற்றப் பதிவுகள்

மற்று + பிற = மற்றுப் பிற

மற்றை + கருமங்கள் = மற்றைக் கருமங்கள்

மற்றை + குழந்தைகள் = மற்றைக் குழந்தைகள்

15. **மிக, நடு என்ற சொற்களின் பின் வல்லினம் மிகும்.**

(எ-டு)

மிக + பெரிய = மிகப்பெரிய

மிக + சிறிய = மிகச்சிறிய

நடு + தெரு = நடுத்தெரு

நடு + கடல் = நடுக்கடல்

நடு + பெயர் = நடுப்பெயர்

16. **முழு, கூட, விட ஆகிய சொற்களின் பின் வல்லினம் மிகும்.**

(எ-டு)

முழு + பக்கம் = முழுப்பக்கம்

முழு + கைச்சட்டை = முழுக்கைச் சட்டை

முழு + பெயர் = முழுப்பெயர்

கூட + கொடு = கூடக்கொடு

கூட + கேள் = கூடக்கேள்

(கத்தியை) விட + கூர்மை = (கத்தியை) விடக் கூர்மை

(அவளை) விட + பாசம் (அவளை) விடப்பாசம்

17. **பொது, திரு, புது என்னும் முற்றுகரச் சொற்களின் பின் வல்லினம் மிகும்.**

பொது + கூட்டம் = பொதுக்கூட்டம்

பொது + திண்ணை = பொதுத்திண்ணை

பொது + பந்தல் = பொதுப்பந்தல்

பொது + கிணறு = பொதுக்கிணறு

திரு + கல்யாணம் = திருக்கல்யாணம்

திரு + தலம் = திருத்தலம்

திரு + குளம் = திருக்குளம்

புது + கண்ணாடி = புதக்கண்ணாடி

புது + புடவை = புதுப்புடவை

புது + துணி = புதுத்துணி

18. **'ஆக' என்று முடியும் அனைத்துச் சொல்லுருபுகளின் பின்னும் வல்லினம் மிகும்.**

(எ-டு)

முதல்வர் அன்பாகப் பேசினார்

மெதுவாகப் பாடுகிறான்.

சிறப்பாகச் செயற்படுகிறார்.

ஏழையாகப் பிறந்தான்

பணக்காரனாகப் பெருமுயற்சி செய்கிறான்.

அரிசிக்குப் பதிலாகச் சோறு கொடுக்க மாநகராட்சி முடிவு

நாடாளுமன்ற உறுப்பினர் மூலமாகக் குடியரசுத் தலைவரைச் சந்தித்தார்.

சட்டத்திற்கு மாறாகச் செயற்படுபவர் தண்டிக்கப்படுவர்.

கடல் வழியாகத் தீவிரவாதிகள் நகருக்குள் ஊடுருவ முயற்சி செய்தனர்.

நாளிதழ்கள் வாயிலாகச் செய்திகள் வெளியாகின்றன.

கிராமப் பெரியவர் குடும்பத்திற்கு ஏதுவாகப் பல முடிவுகள் எடுக்கப்பட்டுள்ளன.

19. **இடை கீழ் என்னும் சொல்லுருபுகளின் பின் வல்லினம் மிகும்.**

(எ-டு)

<u>இடைப்பட்ட</u> நாள்களில் ஓய்வு எடுத்துக்கொள்.

<u>புலிகளிடைப்</u> பசு போலத் தவித்தான்

<u>இத்திட்டத்தின்கீழ்ப்</u> பலனடைந்தவர் யார்?

<u>கீழ்க்காணும்</u> செய்திகள் முக்கியமானவை

20. **சின்ன என்னும் பெயரடை ஏனைய பெயரடைகள் போல் அல்லாமல் வல்லினம் மிகுந்து வரும்.**

(எ-டு)

சின்ன + குடை = சின்னக்குடை

சின்ன + தட்டு = சின்னத்தட்டு

சின்ன + பெண் = சின்னப்பெண்

21. **எல்லா அனைத்து என்னும் சொற்களின் பின் வல்லினம் மிகும்.**

(எ-டு)

<u>எல்லாக்</u> குழந்தைகளும் வந்துவிட்டனர்

<u>அனைத்துப்</u> பள்ளிகளுக்கும் நாளை விடுமுறை

<u>எல்லாப்</u> பாடங்களும் கடினமாக உள்ளன.

அனைத்துக் கேள்விகளுக்கும் பதில் கூற வேண்டும்.

22. **மெல்ல, உரக்க, நிரம்ப நிறைய என்னும் அகர ஈற்று வினையடைகளின் பின் வல்லெழுத்து மிகும்.**

(எ-டு)

மெல்ல + போ = மெல்லப் போ

உரக்க + சொன்னேன் = உரக்கச் சொன்னேன்

உரக்க + கூவினான் = உரக்கக் கூவினான்

நிரம்ப + பேசினான் = நிரம்பப் பேசினான்

நிரம்ப + கொடுத்தார் = நிரம்பக் கொடுத்தார்

நிறைய + செய்திகள் = நிறையச் செய்திகள்

நிறைய + கற்றுக்கொள் = நிறையக் கற்றுக்கொள்

23. **‘என’ என்னும் இடைச்சொல்லின் (அகர ஈற்றுச் சொல்லுருபின்) பின் வல்லெழுத்து மிகும்**

(எ-டு)

தொழிலாளர்களின் <u>வளர்ச்சிகெனப்</u> பல நடவடிக்கைகளை அரசு எடுத்து வருகிறது.

அங்குப் போகாதே <u>எனச்</u> சொன்னார்.

கோயிலுக்குச் செல்லும் வழி எது <u>எனக்</u> கேட்டார்.

24. **அன்றி, இன்றி என்னும் எச்சச் சொற்களுக்குப் பின் வல்லெழுத்து மிகும்.**

(எ-டு)

போராட்டம் <u>செய்தாலன்றிக்</u> கிடைக்காது

<u>பணமின்றிக்</u> கிடைக்காது.

கேள்வி கேட்கும் மாணவனன்றிப் பிற மாணவர் பேசக்கூடாது.

வெளியில் தடையின்றிச் செல்லலாம்.

அடித்தாலன்றி + தாரான் = அடித்தாலென்றித் தாரான்

விண்ணின்றி + பொய்ப்பின் = விண்ணின்றிப் பொய்ப்பிக்கப்படும்.

25. **உயிரெழுத்தில் முடியும் 'அரை', பாதி என்னும் சொற்களின் பின் வல்லெழுத்து மிகும்.**

(எ-டு)

அரை + காசு = அரைக்காசு

அரை + பங்கு = அரைப்பங்கு

அரை + புள்ளி = அரைப்புள்ளி

அரை + சம்பளம் = அரைச்சம்பளம்

பாதி + கிணறு = பாதிக்கிணறு

பாதி + தோட்டம் = பாதித் தோட்டம்

பாதி + செலவு = பாதிச்செலவு

26. **ஆகார ஈற்றுப் பெயர்ச் சொற்களின் பின் வல்லினம் மிகும்.**

(எ-டு)

நிலா + சோறு = நிலாச்சோறு

பலா + பழம் = பலாப்பழம்

27. **அகர, இகர, உகர வினையெச்சத்தைத் தொடர்ந்து வல்லெழுத்து மிகும்.**

(எ-டு)

பாட + சொல் = பாடச்சொல்

வர + சொல் = வரச்சொல்

கூற + தொடங்கு = கூறத்தொடங்கு

ஓடி + பிடி = ஓடிப்பிடி

தாங்கி + பிடி = தாங்கிப்பிடி

பாடி + திரிந்த = பாடித்திரிந்த

விட்டு + செல் = விட்டுச்செல்

கேட்டு + பார் = கேட்டுப்பார்

தொட்டு + பேசு = தொட்டுப்பேசு

28. **அத்து, அற்று என்பவற்றின் பின் வல்லெழுத்து மிகும்**

(எ-டு)

பட்டனத்து + பிள்ளை = பட்டணத்துப் பிள்ளை

அவற்றுக்கு + கொடு = அவற்றுக்குக் கொடு

29. **ஐ காரச் சாரியை பெற்ற முற்றியலுகரத்தின் பின் வல்லெழுத்து மிகும்.**

(எ-டு)

பண்டு + ஐ = பண்டை

பண்டை + காலம் = பண்டைக்காலம்

30. **வன்தொடர்க் குற்றியலுகரச் சொற்களுக்குப் பின் வல்லெழுத்தை முதலவதாகக் கொண்ட பெயர்ச்சொற்கள் புணரும்போது வல்லெழுத்து மிகும்.**

(எ-டு)

தச்சு + தொழில் = தச்சுத்தொழில்

கற்று + கொடுத்தார் = கற்றுக்கொடுத்தார்

கொக்கு + கால் = கொக்குக்கால்

அச்சு + பிழை = அச்சுப்பிழை

சுக்கு + காப்பி = சுக்குக்காப்பி

கருத்து + குவியல் = கருத்துக் குவியல்

பாட்டு + பாடு = பாட்டுப் பாடு

பட்டு + சேலை = பட்டுச்சேலை

விட்டு + கொடு = விட்டுக்கொடு

மறுத்து + பேசு = மறுத்துப்பேசு

31. **மென்தொடர்க் குற்றியலுகரத்தை அடுத்து வல்லெழுத்தை முதலாவதாகக்கொண்ட பெயர்ச்சொற்கள் வந்து புணரும்போது வல்லெழுத்து மிகும்.**

(எ-டு)

கரும்பு + தோட்டம் = கரும்புத்தோட்டம்

நண்டு + கூட்டம் = நண்டுக்கூட்டம்

பங்கு + சந்தை = பங்குச்சந்தை

மருந்து + கடை = மருந்துக்கடை

கன்று + குட்டி = கன்றுக்குட்டி

இரும்பு + திரை = இரும்புத்திரை

கூண்டு + கிளி = கூண்டுக்கிளி

32. **உயிர்த்தொடர்க் குற்றியலுகரத்தை அடுத்து வல்லொற்று மிகும்.**

வயிறு + பாடு = வயிற்றுப்பாடு

கயிறு + கட்டில் = கயிற்றுக்கட்டில்

படகு + துறை = படகுத்துறை

கிணறு + தவளை = கிணற்றுத் தவளை

கழுகு + பார்வை = கழுகுப்பார்வை

பரிசு + கோப்பை = பரிசுக்கோப்பை

முதுகு + தண்டு = முதுகுத் தண்டு

விறகு + கட்டு = விறகுக்கட்டு

33. **வைத்து, பொறுத்து, பொருட்டு, முன்னிட்டு, குறித்து என்னும் வன்தொடர்க் குற்றியலுகரச் சொல்லுருபுகளின் பின் வல்லெழுத்து மிகும்.**

**(எ.டு)**

குறிப்பு **<u>வைத்துப்</u>** பேசினான்.

இருக்கும் பணத்தை **<u>பொறுத்துத்</u>** திட்டமிடலாம்.

வாடிக்கையாளர்களின் **<u>பொருட்டுச்</u>** சலுகைகள் அளிக்கப்பட்டுள்ளன.

தீபாவளியை **<u>முன்னிட்டுப்</u>** பணப்புழக்கம் அதிகரித்துள்ளது.

சுற்றுச்சூழல் பாதுகாப்பு **<u>குறித்துப்</u>** பொதுமக்களிடம் போதுமான விழிப்புணர்வு இல்லை.

34. **நோக்க, ஆர, போல - என்னும் அகர ஈற்றுச் சொல்லுருபுகளின் பின் வல்லொற்று மிகும்.**

(எ.டு)

அவளை **<u>நோக்கத்</u>** தயக்கமாக இருந்தது.

அவன் **<u>வயிறாரச்</u>** சாப்பிட்டு நாள்கள் பல ஆயின.

சிங்கம் **<u>போலச்</u> சீ**றினான்.

புலி <u>போலப்</u> **பாய்ந்து** சென்றான்.

தமிழ்மொழி **<u>போலப்</u>** பெருமை வாய்ந்த மொழி எதுவுமில்லை.

35. **சுற்றி, வேண்டி, ஒட்டி - என்னும் இகர ஈற்றுச் சொல்லுருபுகளின் பின் வல்லொற்று மிகும்.**

(எ.டு)

அவனைச் **<u>சுற்றிப்</u>** பெரிய நண்பர் கூட்டமே உள்ளது.

கிராமத்தைச் **<u>சுற்றிப்</u>** பார்ப்பது இனிமையானது.

தங்களை விரும்பி **<u>வேண்டிக்</u>** கேட்டுக் கொள்கிறேன்.

முதல்வரின் **<u>வருகையையொட்டிப்</u>** பாதுகாப்பு ஏற்பாடுகள் சிறப்பாகச் செய்யப்பட்டுள்ளன.

பொங்கல் **<u>பண்டிகையையொட்டிப்</u>** புதுத் திரைபடங்கள் திரையிடப்பட்டுள்ளன.

36. **எட்டு, பத்து என்னும் எண்களின் பின் வல்லொற்று மிகும்.**

(எ.டு)

எட்டு + தொகை = எட்டுத்தொகை

பத்து + பாட்டு = பத்துப்பாட்டு

எட்டு + கேள்விகள் = எட்டுக் கேள்விகள்

பத்து + செடிகள் = பத்துச்செடிகள்

37. **திசைப் பெயர்களின் பின் வல்லொற்று மிகும்.**

(எ.டு)

கிழக்கு + பக்கம் = கிழக்குப்பக்கம்

மேற்கு + திசை = மேற்குத்திசை

வடக்கு + புறம் = வடக்குப்புறம்

தெற்கு + கோட்டம் = தெற்குக் கோட்டம்

38. **உருவகங்களின் பின் வல்லெழுத்து மிகும்.**

(எ.டு)

வாழ்க்கைப் படகு

கண்ணீர்ப்பூக்கள்

வாழ்க்கைத் தேர்

விழிக்கயல்

39. **உரிச்சொற்களின் பின் வல்லெழுத்து மிகும்.**

(எ.டு)

சால + பேசினார் = சாலப் பேசினார்

தட + கை = தடக்கை

தவ + சிறிது = தவச்சிறிது

40. **தனிக்குற்றெழுத்தை அடுத்து வரும் ஆகாரத்தின் பின் வல்லொற்று மிகும்.**

(எ.டு)

கனா + கண்டேன் = கனாக்கண்டேன்

நிலா + பாட்டு = நிலாப்பாட்டு

பலா + பழம் = பலாப்பழம்

வினா + கேட்டு = வினாக்கேட்டு

41. **நெடிற்றொடர் குற்றியலுகரம் ஒற்று இரட்டித்துப் புணரும்போது வல்லொற்று மிகும்.**

(எ.டு)

சோறு + பானை = சோற்றுப்பானை

ஆடு + தலை = ஆட்டுத்தலை

ஆறு + பெருக்கு = ஆற்றுப்பெருக்கு

நாடு + பற்று = நாட்டுப்பற்று

காடு + பூனை = காட்டுப்பூனை

ஏடு + கல்வி = ஏட்டுக் கல்வி

மாடு + பண்ணை = மாட்டுப்பண்ணை

42. **"குறில் + நெடில்" இணையாய் வரும் ஆகார ஈற்று நிரையசைச் சொற்களின் பின் "கள்" விகுதி சேரும் போது வல்லெழுத்து மிகும்.**

(எ.டு)

விழா + கள் = விழாக்கள்

கனா + கள் = கனாக்கள்

வினா + கள் = வினாக்கள்

சுறா + கள் = சுறாக்கள்

புறா + கள் = புறாக்கள்

43. **உகர ஈற்றில் முடியும் "குறில் + குறில்" இணைந்த நிரையசைச் சொற்களின் பின் "கள்" விகுதி வரும்போது வல்லொற்று மிகும்.**

(எ.டு)

வடு + கள் = வடுக்கள்

வழு + கள் = வழுக்கள்

தெரு + கள் = தெருக்கள்

பசு + கள் = பசுக்கள்

44. **முற்றியலுகரத்தினை அடுத்து வரும் வருமொழி முதலெழுத்து மிகும் வல்லொழுத்துகளாக இருக்கும்போது வல்லொற்று மிகும். தனிக்குறிலை அடுத்து வரும் எல்லா உகரமும், இரண்டு எழுத்துகளை அடுத்து வரும் கு, சு, டு, து, பு, று அல்லாத மற்ற உகரமும் முற்றியலுகரங்கள் ஆகும்.**

(எ.டு)

பொது + பார்வை = பொதுப்பார்வை

கணு + கால் = கணுக்கால்

திரு + கோயில் = திருக்கோயில்

அறிவு + கல்லூரி = அறிவுக்கல்லூரி

முழு + தொகை = முழுத்தொகை

45. **ஓரெழுத்து ஒரு மொழிக்குப் பின் வல்லொற்று மிகும்.**

(எ.டு)

ஈ + கால் = ஈக்கால்

பூ + பறித்தான் = பூப்பறித்தான்

தீ + குணம் = தீக்குணம்

தீ + செயல் = தீச்செயல்

தீ + பிடித்தது = தீப்பிடித்தது

கை + குழந்தை = கைக்குழந்தை

தை + பொங்கல் = தைப்பொங்கல்

நா + குழறியது = நாக்குழறியது

தீ + குச்சி = தீக்குச்சி

கை + செலவு = கைச்செலவு

பூ + சூடு = பூச்சூடு

கை + தறி = கைத்தறி

கை + பிடி = கைப்பிடி

**46. ஓரெழுத்து ஒரு மொழியின் பின் "கள்" விகுதி சேரும்போது வல்லெழுத்து மிகும்.**

(எ.டு)

ஆ + கள் = ஆக்கள்

பா + கள் = பாக்கள்

பூ + கள் = பூக்கள்

ஈ + கள் = ஈக்கள்

மா + கள் = மாக்கள்

**47. நிலைமொழி ஈற்றில் உயிர்வரின் வல்லெழுத்து மிகும்.**

(எ.டு)

பார்க்க + பார்க்க = பார்க்கப் பார்க்க

வரி + குயில் = வரிக்குயில்

பசி + பிணி = பசிப்பிணி

தேனீ + கூட்டம் = தேனீக்கூட்டம்

உணவு + பொருள் = உணவுப்பொருள்

இளமை + பருவம் = இளமைப்பருவம்

தலைமை + பீடம் = தலைமைப்பீடம்

**48. நிலைமொழி ய், ர் வந்து வருமொழி பெயர்ச்சொல்லாக இருந்தால் வல்லெழுத்து மிகும்.**

(எ.டு)

நாய் + குட்டி = நாய்க்குட்டி

வாய் + சொல் = வாய்ச்சொல்

தேர் + தட்டு = தேர்த்தட்டு

மலர் + கூந்தல் = மலர்க்கூந்தல்

நீர் + குமிழி = நீர்க்குமிழி

யாழ் + பாணன் = யாழ்ப்பாணன

தமிழ் + தென்றல் = தமிழ்த்தென்றல்

49. **பண்புத்தொகையில் வல்லெழுத்து மிகும்.**

(எ.டு)

கறுப்பு + காளை = கறுப்புக் காளை

வெள்ளை + புடவை = வெள்ளைப் புடவை

இனிப்பு + பண்டம் = இனிப்புப் பண்டம்

வட்டம் + கல் = வட்டக் கல்

வெள்ளை + தாள் = வெள்ளைத் தாள்

50. **இருபெயரொட்டுப் பண்புத் தொகையில் வல்லெழுத்து மிகும்.**

(எ.டு)

சாரை + பாம்பு = சாரைப் பாம்பு

மல்லிகை + பூ = மல்லிகைப் பூ

ஆவணி + திங்கள் = ஆவணித் திங்கள்

வெள்ளி + கிழமை = வெள்ளிக் கிழமை

கோடை + காலம் = கோடைக் காலம்

முல்லை + காடு = முல்லைக் காடு

முருங்கை + காய் = முருங்கைக் காய்

51. **உவமைத் தொகையில் வல்லெழுத்து மிகும்.**

(எ.டு)

தாமரை + திருவடி = தாமரைத் திருவடி

முத்து + பற்கள் = முத்துப்பற்கள்

புலி + பாய்ச்சல் = புலிப்பாய்ச்சல்

தங்கம் + குணம் = தங்கக்குணம்

52. **ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சத்தில் வல்லெழுத்து மிகும்.**

(எ.டு)

அசையா<u>த்</u> தேர்

உலவா<u>த்</u> தென்றல்

உருளா<u>ச்</u> சக்கரம்

எழுதா<u>க்</u> கவிதை

ஓடா<u>க்</u> குதிரை

பாடா<u>ப்</u> பாட்டு

நகராப் பேருந்து

விரும்பாப் பயணம்

எட்டாக் கனி

செல்லாக் காசு

அறியாப் பிள்ளை

53. **ஆறாம் வேற்றுமைத் தொகையில் நிலைமொழி அஃறிணையாக இருப்பின் வல்லெழுத்து மிகும். ஆறாம் வேற்றுமை உருபு அது.**

(எ.டு)

குருவி + தலை = குருவித்தலை (குருவியினது தலை)

பூனை + கால் = பூனைக்கால் (பூனையினது கால்)

தேர் + தட்டு = தேர்த்தட்டு (தேரினது தட்டு)

புலி + தலை = புலித்தலை (புலியினது தலை)

கிளி + பேச்சு = கிளிப்பேச்சு (கிளியினது பேச்சு)

கங்கை + கரை = கங்கைக்கரை (கங்கையினது கரை)

54. **இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகையில் வல்லெழுத்து மிகும்.**

(எ.டு)

கஞ்சி + தொட்டி = கஞ்சித்தொட்டி

(கஞ்சியை ஊற்றி வைத்திருக்கும் தொட்டி)

வெற்றி + திருமகன் = வெற்றித் திருமகன்

(வெற்றியைப் பெற்ற திருமகன்)

எலி + கூண்டு = எலிக்கூண்டு (எலியை அடைக்கும் கூண்டு)

அரிசி + பானை = அரிசிப்பானை (அரிசியை வைத்துள்ள பானை)

55. **மூன்றாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகையில் வல்லெழுத்து மிகும்.**

(எ.டு)

வெள்ளி + பணம் = வெள்ளிப்பணம் (வெள்ளியால் செய்த பணம்)

பித்தளை + தட்டு = பித்தளைத்தட்டு (பித்தளையால் செய்த தட்டு)

பருத்தி + புடவை = பருத்திப்புடவை (பருத்தியால் செய்த புடவை)

56. **நான்காம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகையில் வல்லெழுத்து மிகும்.**

(எ.டு)

குழந்தை + பால் = குழந்தைப்பால் (குழந்தைக்குக் கொடுக்கும் பால்)

உரிமை + போராட்டம் = உரிமைப்போராட்டம்

(உரிமைக்காக நடத்தும் போராட்டம்)

பசு + தீவனம் = பசுத்தீவனம் (பசுவுக்குக் கொடுக்கும் தீவனம்)

**57. ஐந்தாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகையில் வல்லெழுத்து மிகும்.**

(எ.டு)

நிலம் + கரி = நிலக்கரி (நிலத்திலிருந்து எடுக்கும் கரி)

ஏரி+ தண்ணீர் = ஏரித்தண்ணீர் (ஏரியிலிருந்து கிடைக்கும் தண்ணீர்)

தேங்காய் + பால் = தேங்காய்ப்பால் (தேங்காயிலிருந்து பிழியப்படும் பால்)

**58. ஏழாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகையில் வல்லெழுத்து மிகும்.**

(எ.டு)

மலை + கள்ளன் = மலைக்கள்ளன் (மலையின்கண் உள்ள கள்ளன்)

சென்னை + பல்கலைக்கழகம் = சென்னைப் பல்கலைக்கழகம் (சென்னையின்கண் உள்ள பல்கலைக்கழகம்)

சோலை + குயில் = சோலைக்குயில் (சோலையின்கண் உள்ள குயில்)

**59. இரண்டாம் வேற்றுமைத் தொடரில் வல்லெழுத்து மிகும்.**

(எ.டு)

செய்யுளை + படி = செய்யுளைப் படி

கெட்டதை + செய்யாதே = கெட்டதைச் செய்யாதே

சீதையை + காண்பேன் = சீதையைக் காண்பேன்

கதிரவனை + கண்டேன் = கதிரவனைக் கண்டேன்

**60. நான்காம் வேற்றுமைத் தொடரில் வல்லெழுத்து மிகும்.**

(எ.டு)

வீட்டுக்கு + போனான் = வீட்டுக்குப்போனான்

நாட்டுக்கு + சேவைசெய் = நாட்டுக்குச் சேவைசெய்

கடைக்கு + போ = கடைக்குப் போ

அவனுக்கு + தெரியும் = அவனுக்குத் தெரியும்

## 10-5 வல்லெழுத்து மிகாவிடங்கள்

பொதுவாக வருமொழி முதலில் க,ச,த,ப ஆகிய வரிசைச் சொற்கள் இல்லையென்றால் வல்லெழுத்து மிகாது. சில இடங்களில் க, ச, த, ப வரிசையில் வருமொழி தொடங்கினாலும் வல்லெழுத்து மிகாது. அவை;

**1. சுட்டுப் பெயர்களுடன் புணரும் வல்லின எழுத்துகள் மிகா.**

(எ.டு)

அது + காண் = அதுகாண்

இது + காண் = இதுகாண்

அது + செய் = அதுசெய்

அது + தா = அதுதா

இது + பார் = இதுபார்

2. **வினாப் பெயர்களுடன் புணரும் வல்லின எழுத்துகள் மிகா.**

(எ.டு)

எது கண்டாய்?

யாது காண்பாய்?

எது செய்தாய்?

யாது செய்வாய்?

எது தந்தாய்?

யாது தருவாய்?

எது படித்தாய்?

எது தவறு?

யாவை போயின?

3. **அவ்வளவு, இவ்வளவு, எவ்வளவு என்ற சொற்களுடன் புணரும் வல்லெழுத்துகள் மிகா.**

(எ.டு)

அவ்வளவு கண்டேன்

எவ்வளவு கொடுத்தாய்

இவ்வளவு பேசினாய்

அவ்வளவு பெரியவீடா?

இவ்வளவு சிறிய வீடா?

4. **அத்தனை, இத்தனை, எத்தனை என்னும் சொற்களின் பின் வல்லெழுத்துகள் மிகா.**

(எ.டு)

அத்தனை கேள்விகளா?

இத்தனை பாடல்களா?

எத்தனை பசுக்கள் உள்ளன?

5. **அத்தகைய, இத்தகைய, எத்தகைய என்னும் சொற்களின் பின் வல்லெழுத்துகள் மிகா.**

(எ.டு)

அத்தகைய திறமை உள்ளது.

அத்தகைய பேச்சைக் கேட்டதுண்டா?

இத்தகைய செயலை முடிக்க முடியாது?

எத்தகைய சால்பு உடையவர்?

6. **அன்றைய, இன்றைய, என்றைய என்னும் சொற்களின் பின் வல்லெழுத்துகள் மிகா.**

(எ.டு)

அன்றைய செய்தி விரும்பத்தக்கதன்று

இன்றைய தகவல் என்ன?

அன்றைய கோட்பாடுகள்

இன்றைய கடமைகள்

என்றைய பழக்கவழக்கம்

7. **"செய்யிய" என்னும் வாய்ப்பாட்டு வினையெச்சத்துடன் புணரும் வல்லெழுத்துகள் மிகா.**

(எ.டு)

உண்ணிய கண்டான்

காணிய சென்றான்

உண்ணிய தந்தான்

(தற்காலத்தில் வழக்கத்தில் இல்லை)

8. **"செய்பு" என்னும் வாய்ப்பாட்டு வினையெச்சத்துடன் புணரும் வல்லெழுத்துகள் மிகா.**

(எ.டு)

உண்ணுபு கேட்டான்

காணுபு சென்றான்

உண்ணுப தந்தான்

காணுபு போனான்

(தற்காலத்தில் வழக்கத்தில் இல்லை)

9. **"படி" என்று முடியும் வினையெச்சங்களுடன் புணரும் வல்லெழுத்துகள் மிகா.**

(எ.டு)

தரும்படி கேட்டான்

பேசும்படி சொன்னான்

வரும்படி சொன்னான்

உண்ணும்படி வேண்டினார்

எழுதும்படி தந்தான்

சொல்லும்படி பேசினான்

10. **அப்படிப்பட்ட, இப்படிப்பட்ட, எப்படிப்பட்ட என்னும் சொற்களுக்குப் பின் வல்லெழுத்துகள் மிகா.**

(எ.டு)

அப்படிப்பட்ட பெரியவர் இவர்தாமா?

இப்படிப்பட்ட செயலைச் செய்தீர்?

எப்படிப்பட்ட குடும்பம் அது?

எப்படிப்பட்ட கற்பனை இது?

11. **அப்போதைய, இப்போதைய, எப்போதைய என்னும் சொற்களுக்குப் பின் வல்லெழுத்துகள் மிகா.**

(எ.டு)

அப்போதைய பழக்கவழக்கங்கள்

இப்போதைய பண்பாட்டுச் சிறப்புகள்

எப்போதைய கோட்பாடுகள்

12. **அவ்வாறு, இவ்வாறு, எவ்வாறு என்னும் சொற்களுக்குப் பின் வல்லெழுத்துகள் மிகா.**

(எ.டு)

அவ்வாறு சொன்னார்

அவ்வாறு செய்திருப்பானோ?

இவ்வாறு போர் நடந்துவிடுமோ?

இவ்வாறு கூறினார்?

எவ்வாறு செய்தல் வேண்டும்?

எவ்வாறு கேட்டார்?

13. **அன்று, இன்று, என்று, ஆவது, போன்று, அடா, அடி என்னும் சொற்களுக்குப் பின் வல்லெழுத்துகள் மிகா.**

(எ.டு)

அன்று கேட்டார்

இன்று சொன்னார்

என்று தருவார்

அவரைப் போன்று கற்றவர் யாருளர்?

அவராவது கொடுப்பதாவது?

யாரடா செல்வதங்கு?

ஏனடி செல்கிறாய்?

14. **அன்று, பிறகு, முன்பு, உடைய, உள்ள, உரிய, ஆன, வரை, கொண்டு, தக்க, தகுந்த, ஏற்ற - ஆகியன வலி மிகாமல் புணரும் சொல்லுருபுகளாகும்.**

(எ.டு)

**திங்களன்று** தேர்வு நடைபெறும்.

அடுத்த தலைவர் யாரென்று **பிறகு** பார்ப்போம்.

வீட்டின் **முன்பு** செடிகள் வளர்ந்துள்ளன.

**யாருடைய** காசும் தேவையில்லை.

**அவருக்குள்ள** செல்வாக்கு அளப்பரியது.

ஒவ்வொருவர்க்கும் **உரிய** பங்கு கிடைக்கும்.

சிறந்த **இயக்குநருக்கான** பரிசு ஒரு தமிழருக்குக் கிடைத்தது.

காடு **வரை** பிள்ளை

மனிதன் இறக்கும்போது **கொண்டு** செல்வது எதுவுமில்லை.

படிப்புக்குத் **தக்க** பயிற்சி இன்னும் கிடைக்கவில்லை.

வேலைக்குத் **தகுந்த** சம்பளம் தரவில்லை.

மனநிலைக்கு **ஏற்ற** சோகப்பாட்டு காதில் விழுகிறது.

15. **ஆவது, அம்ம, மன்ற, வாளா, சும்மா என்னும் இடைச்சொற்களின் பின் வல்லெழுத்துகள் மிகா.**

(எ.டு)

நானாவது போய்ப் பார்த்திருக்க வேண்டும்.

அவனாவது சென்றானா?

அம்ம கொடிது!

மன்ற தெளிந்தார்

வாளா சென்றான்

சும்மா போனான்

16. **நல்ல, தீய, அரிய எனும் பண்புச் சொற்களை அடுத்து வரும் வல்லெழுத்துகள் மிகா.**

(எ.டு)

நல்ல பாம்பு

நல்ல கிணறு

தீய பழக்கம்

தீய குணங்கள்

அரிய செயற்பாடுகள்

அரிய காட்சி

17. **உயர்திணைப் பெயர்ச் சொல்லுடன் “சார்பாக”, “தொடர்பாக” என்னும் ஒட்டுகள் வந்து சேரும்பொழுது வல்லெழுத்துகள் மிகா.**

(எ.டு)

மாணவர் சார்பாக

உறுப்பினர் சார்பாக

உறுப்பினர் தொடர்பாக.

18. **பெயரெச்சத் தொடரின் ஒட்டுகள் “போது”, “படி”, “படியால்” ஆகியன வரும்போது வல்லினம் மிகா.**

(எ.டு)

அவன் சென்ற போது

அவன் செய்தபடி

அவன் சொன்னபடியால்

19. **பெயர்ச் சொல்லோடு “தொறும்”, “தோறும்” என்னும் பின்னொட்டுகள் வந்து புணரும்பொழுது வல்லினம் மிகா.**

(எ.டு)

நகர்தோறும்

மனைதோறும்

கல்லூரிதோறும்

நாடுதொறும்

20. **எழுவாயாக நிற்கும் பெயர்ச்சொற்களுடன் “கூட”, “பற்றி”, “பொருட்டு”, “பால்”, “குறித்து”, “தவிர” ஆகிய ஒட்டுகள் சேரும்பொழுது வல்லினம் மிகா.**

(எ.டு)

தலைவர்கூட

நாடுபற்றி

ஆசிரியர்பொருட்டு

பசுகுறித்து

ஆடு தவிர

21. **அம்மை, அப்பர், மாமி, அண்ணி, தந்தை, தம்பி, தங்கை, அம்மா, அப்பா, மாமா, அண்ணா, அக்கா ஆகிய முறைப்பெயர்களையும்,**

**முறை விளிப் பெயர்களையும் அடுத்து வரும் வல்லெழுத்துகள் மிகா.**

(எ.டு)

அம்மை கோயிலுக்குச் சென்றுள்ளார்.

அப்பர் சோறு சாப்பிட்டார்.

மாமி சென்றாள்.

அண்ணி கூப்பிட்டார்.

தந்தை தாங்கினார்.

தம்பி பார்த்தான்.

தங்கை பூச்சூடினாள்.

அம்மா பசிக்கிறது.

அப்பா செல்லலாம்.

மாமா கொடுப்பீர்.

மாமி சாப்பிடுவீர்.

அண்ணா செல்வீர்.

அண்ணி கேட்பீர்.

தம்பி படிப்பாய்.

தங்கை பாடுவாய்.

அக்கா தருவீர்.

22. **அகரவீற்று வினைமுற்றுகளுடன் புணரும் வல்லெழுத்துகள் மிகா.**

(எ.டு)

சென்றன பசுக்கள்

பறந்தன பறவைகள்

விழுந்தன கதிர்கள்

பொழிந்தன கார்மேகங்கள்

வந்தன கழுதைகள்

நடந்தன கால்கள்

23. **அகரவீற்று பன்மைப் பெயர்களுடன் புணரும் வல்லெழுத்துகள் மிகா.**

(எ.டு)

சில கழுதைகள்

சில பன்றிகள்

சில பொருள்கள்

சில பதர்கள்

பல பெயர்கள்

பல காட்சிகள்

பல கேள்விகள்

பல சொற்கள்

பல தடைகள்

சில கற்றார்

பல கற்றார்

**24. எட்டு, பத்து தவிர பிற எண்ணுப் பெயர்களுடன் புணரும் வல்லெழுத்துகள் மிகா.**

(எ.டு)

ஒரு புத்தகம்

ஒன்று சாப்பிடு

ஒன்று கூடுவோம்

ஒன்று செய்

ஒரு செயல்

ஒரு பாடம்

ஒரு கோடி

இரண்டு பசுக்கள்

இரண்டு கண்கள்

இரண்டு காளைகள்

இரு கண்கள்

மூன்று காளைகள்

மூன்று தமிழ்

மூன்று கனிகள்

நான்கு திசைகள்

ஐந்து கால்கள்

ஐந்து பழங்கள்

ஐந்து பொறிகள்

ஆறு தொழில்

ஆறுபடை

ஆறுகாடுகள்

அறுசீர்

ஏழு கடல்கள்

ஏழு பிறப்பு

ஏழு சிறப்பு

ஒன்பது தானியம்

ஒன்பது பறவைகள்

**25. நிறுத்தக் குறிகள் பயன்பாட்டால் கீழ்க்காணும் இடங்களில் வல்லெழுத்துகள் மிகா.**

(எ.டு)

கேட்பதற்கு, காது கூர்மையாக இருக்க வேண்டும்.

அதைச் செய்வதற்கு, பணம் தேவைப்படும்

அதற்கு மாற்றாக, பட்டாடை எடுத்தாள்.

**26. வருமொழி மேற்கோள் குறிக்குள் இருந்தால் வல்லெழுத்து மிகாது.**

(எ.டு)

இருசொற்கள் இணைவதை "புணர்ச்சி" என்கிறோம்.

அதனை "தினமணியில்" காணலாம்.

நகரின் பெயரை "கர்நாடக" அரசு மாற்றியது.

**27. வருமொழி அடைப்புக்குறிக்குள் உள்ளேயும் வெளியேயும் இருந்தால் வல்லெழுத்து மிகாது.**

(எ.டு)

எனக்கு அவரை (பாடலாசியராக) தெரியாது.

எனக்கு அவரை (ஆசிரியராக) தெரியாது.

உடற்கூறியல் (Anatomy) பற்றிய நூல்

**28. வருமொழி சுருக்கக் குறியீடாக இருந்தால் வல்லெழுத்து மிகாது.**

(எ.டு)

மின்னிணைப்பை த.மி.வா (தமிழ்நாடு மின்சார வாரியம்) துண்டித்தது.

**29. வடமொழி, ஆங்கிலம் போன்ற பிறமொழிச் சொற்கள் வருமொழியாக வரும் தொடர்களில் வல்லெழுத்து மிகுவதில்லை.**

(எ.டு)

பாத + காணிக்கை = பாதகாணிக்கை

பதி + பக்தி = பதிபக்தி

பாச + தீபம் = பாசதீபம்

பந்த + பாசம் = பந்தபாசம்

தாலி + பாக்கியம் = தாலிபாக்கியம்

தெய்வ + தரிசனம் = தெய்வதரிசனம்

தேச + பக்தி = தேசபக்தி

**30. ஐகார வரிசை உயிர்மெய் எழுத்துகள் ஓரெழுத்துச் சொற்களாய் வந்து அவற்றொடு “கள்” விகுதி சேரும் போது வல்லெழுத்துகள் மிகா.**

(எ.டு)

கை + கள் = கைகள்

பை + கள் = பைகள்

**31. “கள்” என்னும் அஃறிணைப் பன்மை விகுதியில் வல்லெழுத்து மிகாது.**

(எ.டு)

எழுத்து + கள் = எழுத்துகள்

தோப்பு + கள் = தோப்புகள்

கருத்து + கள் = கருத்துகள்

வாழ்த்து + கள் = வாழ்த்துகள்

பொருள் + கள் = பொருள்கள்

நாள் + கள் = நாள்கள்

**32. சிறிய, பெரிய என்னும் குறிப்புப் பெயரெச்சங்களின் பின் வல்லெழுத்துகள் மிகா.**

(எ.டு)

சிறிய + கண்ணாடி = சிறிய கண்ணாடி

சிறிய + பெண் = சிறிய பெண்

பெரிய + பாட்டி = பெரியபாட்டி

பெரிய + புத்தகம் = பெரிய புத்தகம்

**33. நிலைமொழி உயர்திணையில் அமையும் எந்தப் பெயர்த்தொகையிலும் வல்லெழுத்துகள் மிகா.**

(எ.டு)

தோழி கூற்று

திருத்தொண்டர் திருக்கோவில்

ஆசிரியர் சம்பளம்

பெரியார் பேரன்

மேற்கண்ட தொடர்களெல்லாம் ஆறாம் வேற்றுமைத் தொகையாகவும், நான்காம் வேற்றுமைத் தொகையாகவும் அமைந்த போதிலும் நிலைமொழி உயர்திணை ஆதலால் வல்லெழுத்துகள் மிகவில்லை.

**34. வன்தொடர் ஒழிந்த ஏனைய குற்றியலுகரங்களுடன் புணரும் வல்லெழுத்துகள் மிகா.**

(எ.டு)

ஆறு தலை

எஃகு சிறிது

விறகு பெரிது

பந்து தந்தான்

செய்து போனான்

35. **மென்தொடர்க் குற்றியலுகர ஈற்று வினையெச்சத்தில் வல்லெழுத்து மிகாது.**

(எ.டு)

கண்டு களித்தான்

வந்து சேர்ந்தான்

சென்று திரும்பினான்

வந்து போனான்

உண்டு படுத்தான்

36. **இடைத்தொடர் குற்றியலுகர ஈற்று வினையெச்சத்தில் வல்லெழுத்து மிகாது.**

(எ.டு)

பெய்து கெடுத்தது

நெய்து சேர்த்தான்

கொய்து தின்றான்

செய்து பார்த்தான்

37. **உயிர்த்தொடர் குற்றியலுகர ஈற்று வினையெச்சத்தில் வல்லெழுத்து மிகாது.**

(எ.டு)

அழுது கலங்கினான்

உழுது களைத்தான்

ஆராயாது செய்தான்

அழுது தீர்த்தான்

38. **பெயரெச்சத்துடன் புணரும் வல்லின எழுத்துகள் மிகாது.**

(எ.டு)

ஓடிய குதிரை

ஓடுகின்ற குதிரை

திரிந்த காலம்

வந்த சிரிப்பு

வருகின்ற சிரிப்பு

பெற்ற செல்வம்

தந்த தெய்வம்

படித்த பையன்

பார்த்த பெண்

வென்ற தமிழன்

39. **எதிர்மறைப் பெயரெச்சங்களில் வல்லெழுத்துகள் மிகா.**

(எ.டு)

செல்லாத பணம்

கறவாத பசு

கேளாத செய்தி

முற்றாத தேங்காய்

ஓடாத குதிரை

பேசாத படம்

வாடாத பூ

காணாத கண்

40. **இரண்டாம் வேற்றுமை உருபாகிய “ஐ” நான்காம் வேற்றுமை உருபாகிய “கு” ஆகிய இவ்விரண்டைத் தவிர, ஏனைய உருபுகளின் பின் வல்லெழுத்துகள் மிகா.**

(எ.டு)

என்னோடு சேர்ந்து விடு - ஓடு

எங்களது பூமி - அது

பாலொடு தேன் கலந்தற்றே - ஒடு

மரத்திலிருந்து பறித்தான் - இல்

குரங்கது குட்டி - அது

என்னுடைய புத்தகம் - உடைய

மலையினின்று பாய்ந்தான் - இன்

41. **முதல் வேற்றுமையில் புணர்ந்து நிற்கும் வல்லின எழுத்துகள் மிகா. (முதல் வேற்றுமை - எழுவாய்; உருபு இல்லை)**

(எ.டு)

புலி கண்டது

எலி செய்தது

மாடு பாய்ந்தது

கிளி பேசும்

மலர் பூத்தது

கிளி கொஞ்சியது

வண்டி சென்றது

பாம்பு சீறிற்று

42. **இரண்டாம் வேற்றுமைத் தொகையில் புணரும் வல்லெழுத்துகள் மிகா.**

(எ.டு)

நாடு கண்டேன்

தண்ணீர் குடித்தான்

காடு சேர்ந்தான்

புத்தகம் படித்தான்

வீடு இடித்தான்

43. **மூன்றாம் வேற்றுமை விரிகளில் புணரும் வல்லின எழுத்துகள் மிகா.**

(எ.டு)

பல்லால் + கடித்தான் = பல்லால் கடித்தான்

கணவரொடு + சென்றாள் = கணவரொடு சென்றாள்

என்னொடு + கற்ற = என்னொடு கற்ற

கண்ணால் + கண்டேன் = கண்ணால் கண்டேன்

பொன்னொடு + தந்த = பொன்னொடு தந்த

சேரனொடு + கண்ணன் வந்தார் = சேரனொடு கண்ணன் வநதார்

44. **மூன்றாம் வேற்றுமைத் தொகையில் வல்லினம் மிகாது.**

(எ.டு)

கை தட்டினான் (கையால் தட்டினான்)

45. **ஆறாம் வேற்றுமை விரிகளில் புணரும் வல்லின எழுத்துகள் மிகா**

(எ.டு)

எனது கை

எனது சடை

எனது தலை

எனது பல்

46. **விளித்தொடர்களில் புணரும் வல்லின எழுத்துகள் மிகா.**

(எ.டு)

அண்ணா கேள்

மகளே போ

தந்தையே தா

மகனே பார்

பெண்ணே பார்

கனவே கலையாதே

கண்ணா தா

**47. ஐந்தாம் வேற்றுமைத் தொகையில் வலி மிகாது**

(எ.டு)

வரை பாய்ந்தான் (வரையிலிருந்து பாய்ந்தான்)

**48. ஏழாம் வேற்றுமைத் தொகையில் வலி மிகாது.**

(எ.டு)

ஊர் தங்கினான் (ஊரின்கண் தங்கினான்)

**49. சில உரிச்சொற்களின் பின் வலி மிகாது.**

(எ.டு)

உறுபொருள் கொடுத்தும் உதவினான்

நனி நின்றான்

கடிகாவல் நிறைந்த வீடு

மாபெரும் கூட்டம் நடந்தது இங்கு.

கழி பேருவகை கொண்டான் காதலன்

**50. அடுக்குத் தொடர்களில் வலி மிகா.**

(எ.டு)

பார் பார்

பாம்பு பாம்பு

போ போ

தா தா

**51. இரட்டைக் கிளவியில் வலி மிகா.**

(எ.டு)

**சிலுசிலு**வெனக் குளிர் அடிக்கிறது.

நீர் ச**லசல**வென ஓடியது.

தங்க நகை **தகதக**வென மிளிர்ந்தது.

அவன் **படபட**வென்று பேசினான்.

மரம் **சடசட**வென்று முறிந்தது.

அவள் **கலகல**வென்று சிரித்தாள்.

**52. உம்மைத் தொகையில் வலி மிகா.**

(எ.டு)

கதை கட்டுரை

தாய் தந்தை

மேடு பள்ளம்

இரவு பகல்

சொடி கொடி

வெற்றிலை பாக்கு

அக்கா தங்கை

**53. வினைத்தொகையில் வல்லெழுத்துகள் மிகா.**

(எ.டு)

விடிகாலை

குடிதண்ணீர்

குடிநீர்

இடுபொருள்

சுடுசோறு

சுடுசொல்

ஊறுகாய்

குளிர்காலம்

சொறிசிரங்கு

அலைகடல்

54. **வியங்கோள் வினைமுற்றுகளுடன் புணரும் வல்லெழுத்துகள் மிகா.**

(எ.டு)

வாழ்க தலைவர்

வாழ்க கலை

வாழ்க தமிழ்

வாழ்க பாரதம்

கற்க கசடற

வீழ்க பகைவர்

55. **முன்னிலை ஒருமை வினைமுற்றுத் தொடர்களில் வலி மிகா.**

(எ.டு)

நட கோவலா

வா சாத்தா

கொடு பூதா

எறி தேவா

56. **ஆ, ஏ, ஓ ஆகிய இடைச்சொற்களை அடுத்து வலி மிகாது**

(எ.டு)

அவளா சொன்னாள்?

நீயா செய்தாய்?

அவனே கொடுத்தான்.

நானே கள்வன்

யாரையோ தேடுகிறான்.

57. **ஆயுதத் தொடரில் வலி மிகாது**

(எ.டு)

எஃகு கடிது

எஃகு பெரிது

அஃது சிறிது

## 11. முடிவுகளைப் பகுத்தாய்தல்

வல்லொற்று மிகுவதால் / மிகாததால் பொருள் மாறுபடுகின்ற இடங்கள் சுட்டிக்காட்டப்பட்டன. வல்லொற்று மிகாததால் பொருளைப் பிரித்துக் காட்டும் இடங்கள் விளக்கப்பட்டன. வல்லொற்று பயன்படுத்தாததால் உம்மைத் தொகையாக, வினைத் தொகையாக பொருள் குழப்பத்தை ஏற்படுத்தும் இடங்கள் பற்றி எடுத்துக்கூறப்பட்டது. மேலும் தொல்காப்பியம், நன்னூல் ஆகிய இலக்கண நூல்களிலுள்ள வலி மிகுமிடம் / வலி மிகாவிடம் பற்றி விதிவிளக்கு முறையில் நடைமுறை எடுத்துக்காட்டுகளுடன் மாணவர்களுக்கு விளக்கப்பட்டது. காரண காரியத் தொடர்புடன் நிலைமொழி, வருமொழிக்கு இடையே வரும் வல்லொற்றுகள் பற்றி எடுத்துக்கூறப்பட்டது. இது தொடர்பாக தமிழ் அறிஞர்களின் விளக்கங்களும் மாணவர்களுக்குப் புரியும் வண்ணம் எளிய முறையில் எடுத்துரைக்கப்பட்டது.

வேற்றுமைப் புணர்ச்சி, எண் பெயர்ப் புணர்ச்சி, வினையெச்சப் புணர்ச்சி ஆகியவற்றிலுள்ள விதிவிலக்குள் பற்றி விளக்கப்பட்டது. வேற்றுமைத் தொகைகள் வேற்றுமைத் தொடர்கள் ஆகியவற்றில் எவற்றில் வல்லொற்றுகள் மிகும் எவ்விடங்களில் மிகா என்பது பற்றி ஒப்பிட்டும் வேறுபடுத்தியும் அட்டவணைப்படுத்தியும் விளக்கப்பட்டன.

எனவே மாணவர்கள் வல்லொற்று மிகுமிடங்களையும் மிகாவிடங்களையும் பற்றி நன்கு அறிந்த கொண்டனர். இச்செயலாய்வுக்குரிய தகவல்கள் அடைவுத் தேர்வின் மூலம் பெறப்பட்டன. முன் / பின் தேர்வுகளின் மதிப்பெண்கள் கீழ்க்காணும் அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ளன.

## மாணவர்கள் முன்தேர்விலும் பின் தேர்விலும் பெற்ற மதிப்பெண்கள்

| வரிசை எண் | மாணவர் பெயர் | முன்தேர்வு மதிப்பெண் | முன்தேர்வு மதிப்பெண் சதவீதத்தில் | பின்தேர்வு மதிப்பெண் | பின்தேர்வு மதிப்பெண் சதவீதத்தில் |
|---|---|---|---|---|---|
| 1 | மு. கார்த்திகா | 2 | 8 | 10 | 40 |
| 2 | க. பவித்ரா | 7 | 28 | 20 | 80 |
| 3 | க. மதுமிதா | 7 | 28 | 21 | 84 |
| 4 | ச. முஜிதா | 10 | 40 | 16 | 64 |
| 5 | பா.அனுஷ்கா | 11 | 44 | 19 | 76 |
| 6 | ம. சர்மிளா | 14 | 56 | 21 | 84 |
| 7 | மா. சுஜிபாலா | 15 | 60 | 22 | 88 |
| 8 | இ. ஜெபிஷா | 18 | 72 | 23 | 92 |
| 9 | மு. சுபாஷினி | 19 | 76 | 24 | 96 |
| 10 | மு. இளவரசி | 20 | 80 | 25 | 100 |
| 11 | மு. ஜெல்சியா | 20 | 80 | 25 | 100 |
| 12 | மு. ஜெரின் கவி | 20 | 80 | 25 | 100 |
| 13 | மா. முத்துலட்சுமி | 11 | 44 | 23 | 92 |
| 14 | ரா. மகேஷ்வரி | 13 | 52 | 18 | 72 |
| 15 | அ. அபிஷேக் உதயராஜ் | 2 | 8 | 12 | 48 |
| 16 | தெ. செல்வக்குமார் | 5 | 25 | 15 | 60 |
| 17 | வி. வெற்றி சதீஷ் | 6 | 24 | 14 | 56 |
| 18 | செ. வசந்த் | 9 | 36 | 15 | 60 |
| 19 | க. தருண் | 10 | 40 | 17 | 68 |
| 20 | அ. அபினேஷ் | 10 | 40 | 19 | 76 |
| 21 | மு. பிரியதர்ஷின் | 11 | 44 | 18 | 72 |
| 22 | ம. பிரவீண் | 11 | 44 | 18 | 72 |
| 23 | மு. அபிஷேக் | 12 | 48 | 19 | 76 |
| 24 | பா. கவின் சுமேஷ் | 13 | 52 | 20 | 80 |
| 25 | ச. அமுதராஜ் | 13 | 52 | 22 | 88 |
| 26 | க. அர்ஜுன் | 14 | 56 | 19 | 76 |
| 27 | சு. செல்வசூர்யா | 15 | 60 | 21 | 84 |
| 28 | மா. மணிஷ் | 17 | 68 | 22 | 88 |
| 29 | ரா. கோபிநாத் | 17 | 68 | 22 | 88 |
| 30 | ம. மணீஷ் | 17 | 68 | 23 | 92 |
| 31 | ம. அரிகரன் | 17 | 68 | 23 | 92 |
| 32 | மா. உமேஷ் | 15 | 60 | 21 | 84 |

## முன் / பின் தேர்வு எழுதிய மாணவர்கள் - 32 பேர்
## மதிப்பெண்கள் வாரியாக மாணவர்கள் எண்ணிக்கை

| மதிப்பெண்கள் | மாணவர்கள் எண்ணிக்கை | |
|---|---|---|
| | முன் தேர்வு (25) | பின் தேர்வு (25) |
| 0-10 | 2 | 1 |

| | | |
|---|---|---|
| 11-20 | - | - |
| 21-30 | 4 | - |
| 31-40 | 4 | 1 |
| 41-50 | 5 | 1 |
| 51-60 | 8 | 3 |
| 61-70 | 4 | 2 |
| 71-80 | 5 | 8 |
| 81-90 | - | 8 |
| 91-100 | - | 8 |

## முன்தேர்வுக்கும் பின்தேர்வுக்கும் உள்ள வேறுபாடு பின்வரும் கோட்டுப் படத்தின் மூலம் விளக்கப்பட்டுள்ளது




## 12. ஆய்வு முடிவு

முன்தேர்வில் குறைந்த மதிப்பெண் எட்டாகவும் அதிக மதிப்பெண் எண்பதாகவும் இருந்தது. பின்தேர்வில் குறைந்த மதிப்பெண் நாற்பதாகவும் அதிக மதிப்பெண் நூறாகவும் இருந்தது. பின்தேர்வில் எட்டு மாணவர்கள் தொண்ணூறு விழுக்காட்டிற்கு மேல் மதிப்பெண் பெற்றிருந்தனர். முன்தேர்வில் வகுப்பில் உள்ள மொத்த மாணவர்களின் சராசரி மதிப்பெண் ஐம்பது விழுக்காடாக இருந்தது. பின்தேர்வில் வகுப்பில் உள்ள மொத்த மாணவர்களின் சராசரி மதிப்பெண் எழுபத்து ஒன்பது விழுக்காடாக இருந்தது. எனவே இவ்வாய்வு பயனுடையதாக அமைந்தது.

## 13. ஆய்வுச் சுருக்கம்

ஒன்பதாம் வகுப்பு மாணவர்களுக்கு விதிவிளக்கு முறை மூலம் கற்பிப்பதன் வாயிலாகச் சந்திப்பிழை இல்லாமல் எழுதும் திறனை மேம்படுத்துவதற்காக இச்செயலாய்வு மேற்கொள்ளப்பட்டது. ஐந்து நாள்கள் மாணவர்களுக்கு வல்லினம் மிகுமிடங்கள் 60 பற்றியும் வல்லினம் மிகாவிடங்கள் 57 பற்றியும் கற்பிக்கப்பட்டு பயிற்சிகள் கொடுக்கப்பட்டன. முன்தேர்வு, பின்தேர்வு, சராசரி மதிப்பெண்கள் ஆகியவை மூலம் ஆய்வினால் விளைந்த பயன்கள் மதிப்பிடப்பட்டன. விதிவிளக்கு முறை, காரண காரியத் தொடர்பு முறை, அறிஞர்களின் விளக்கங்கள் ஆகியவற்றின் மூலம் பயிற்சி அளித்ததன் வாயிலாக சந்திப்பிழை இல்லாமல் எழுதும் திறன் மேம்படுவது இவ்வாய்வின் மூலம் உறுதி செய்யப்பட்டது. இதன் மூலம் மாணவர்கள் பயனடைந்தனர். தொடர்ந்து இச்செயல்பாடுகளைப் பின்பற்றி மாணவர்களுக்குப் பயிற்சி அளிக்குமாறு இப்பள்ளியின் தமிழாசிரியர்களிடம் கேட்டுக் கொள்ளப்பட்டது.

## 14. நிழற்படங்கள்











## 15. துணைநூற்பட்டியல்


1. வல்லொற்று மிகும் இடங்கள் மற்றும் வல்லொற்று மிகா இடங்கள், பாவலர் சு. பாண்டியன், பாசம் பதிப்பகம், திருநெல்வேலி - 11.
2. இவ்வளவுதான் இலக்கணம், பொ. அசோகன், சாரதா பதிப்பகம், சென்னை 14.
3. பொதுத்தமிழ் இலக்கணம், சுதர்ஷன் பதிப்பகம், சென்னை - 17.
4. தமிழில் ஒற்றுப்பிழையின்றி எழுத மிக எளிய விதிகள், முனைவர் மணிமேகலை புஷ்பராஜ்
5. தமிழ் இலக்கணவியல், புலவர் நன்னன், ஏகம் பதிப்பகம், சென்னை-5.
6. தவறின்றித் தமிழ் எழுதுவோம், புலவர் நன்னன், ஏகம் பதிப்பகம், சென்னை - 5.
7. தொல்காப்பியம், முனைவர் தமிழண்ணல், மணிவாசகர் பதிப்பகம், சென்னை.
8. நன்னூல், முனைவர் தமிழண்ணல், மணிவாசகர் பதிப்பகம், சென்னை.
9. தமிழ் இலக்கணம், முனைவர் தேவிரா, ஸ்ரீ நந்தினி பதிப்பகம், சென்னை -101.
10. ஒன்பதாம் வகுப்பு தமிழ்ப்பாடநூல், தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம், சென்னை - 600006.

**மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம்**
**முனைஞ்சிப்பட்டி - 627355**
**திருநெல்வேலி மாவட்டம்**
**செயலாய்வு முன்தேர்வு / பின்தேர்வு**

நேரம் : 30 நிமிடங்கள் மதிப்பெண்கள் : 25

**I. கோடிட்ட இடத்தில் வல்லொற்று மிகுமா மிகாதா என்பதைக் குறிப்பிடவும்.** **10 x 1 = 10**

1. சுட்டெழுத்துக்குப் பின் வல்லொற்று __________
2. எழுவாய்த் தொடருக்குப் பின் வல்லொற்று __________
3. ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சத்துக்குப் பின் வல்லொற்று__________
4. பெயரெச்சத்துக்குப் பின் வல்லொற்று__________
5. நான்காம் வேற்றுமை விரியில் வல்லொற்று__________
6. இரண்டாம் வேற்றுமைத் தொகையில் வல்லொற்று__________
7. இருபெயரொட்டுப் பண்புத் தொகையில் வல்லொற்று__________
8. அவ்வளவு, இவ்வளவு, எவ்வளவு என்ற சொற்களுக்குப்பின் வல்லொற்று__________
9. அது, இது என்னும் சுட்டுச் சொற்களுக்குப் பின் வல்லொற்று__________
10. விளித்தொடரில் வல்லொற்று__________

**II. கீழ்க்காணும் தொடர்களில் சந்திப்பிழை இல்லாத தொடரைத் தேர்க.**
**5 x 1 = 5**

11. அ) கலகல ஆ) கலக்கல விடை ________
12. அ) வீடு கட்டினான் ஆ) வீடுக்கட்டினான் விடை ________
13. அ) எனது புத்தகம் ஆ) எனதுப் புத்தகம் விடை ________
14. அ) ஓடிய தேர் ஆ) ஓடியத்தேர் விடை ________
15. அ) வளர்பிறை ஆ) வளர்ப்பிறை விடை ________

**III. கீழ்க்காணும் தொடர்களில் சந்திப்பிழை இல்லாத தொடரைத் தேர்க.**
**5 x 1 = 5**

16. அ) எப்படி பேசினார் ஆ) எப்படிப் பேசினார்
இ) இப்படி சொன்னார் ஆ) இப்படி தந்தார் விடை ________

17. அ) அந்த காலம் ஆ) எந்தத் தளிர்
இ) இந்தச் சட்டை ஈ) எந்த பக்கம் விடை ________

18. அ) பத்து பாட்டு ஆ) எட்டுத் தொகை
இ) மூன்றுப் பாடல்கள் ஈ) நான்குக் கேள்விகள் விடை ________

19. அ) குழலை தட்டு ஆ) குழலை காட்டு
இ) பாட்டுப்பாடு ஈ) பாட்டு பாடு விடை ________

20. அ) தீ செயல் ஆ) பூ பறித்தான்

இ) கை குழந்தை ஈ) பூப்பந்தல் விடை _______

**IV. கீழ்க்காணும் தொடர்களில் தேவையான இடங்களில் வல்லொற்றைச் சேர்த்தும், தேவையில்லாத இடங்களில் வல்லொற்றை நீக்கியும் எழுதுக** **5 x 1 = 5**

21. இனிப்பு பண்டத்தை குழந்தைகள் விரும்பி உண்பர்.

விடை _______

22. குயில்க்கூவும் என்பதும் கிளிப்பேசும் என்பதும் மரபுத் தொடர்களாகும்.

விடை _______

23. தாத்தா முழுநிலா நாளில் நிலா சோறு உண்ண சொல்லி அழைத்தார்.

விடை _______

24. "நீர் சலச்சலவென ஓடுகிறது பார்ப்பார்" என்று என் நண்பன் கூறினான்.

விடை _______

25. என் தாய்த்தந்தை இரவுப்பகல் பார்க்காமல் உழைக்கின்றனர்.

விடை _______

# செயலாய்வுச் சுருக்கம்

1. **ஆய்வாளர் பெயர், பதவி** : கி. சௌந்தரராஜன், விரிவுரையாளர்
2. **அலுவலக முகவரி** : மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம், முனைஞ்சிப்பட்டி, திருநெல்வேலி மாவட்டம்.
3. **ஆய்வுத்தலைப்பு** : ஒன்பதாம் வகுப்பு மாணவர்களுக்கு விதி விளக்கு முறை மூலம் கற்பிப்பதன் வாயிலாக சந்திப்பிழை இல்லாமல் எழுதும் திறனை மேம்படுத்தல்
4. **ஆய்வின் தேவையும் இன்றியமையாமையும்**

தொடக்க நிலை மாணவர்கள் எழுதும்போது குறில் நெடில் பிழைகள், மயங்கொலிப் பிழைகள், எழுத்துப்பிழைகள், சந்திப் பிழைகள் ஆகியவை ஏற்படுகின்றன. உயர்நிலைப் பள்ளியில் பயிலும்போது ஓரளவு மற்றப் பிழைகள் இல்லாமல் எழுதக் கற்றுக்கொள்கின்றனர். ஆனால் பெரும்பாலான உயர்நிலைப் பள்ளி மாணவர்கள் சந்திப்பிழை விடுகின்றனர். சந்திப்பிழைகளால் பொருள் குழப்பம், பிரித்துக்காட்டல் ஆகியன நிகழ்கின்றன. பள்ளிப்பாடங்களில் சந்திப்பிழைகள் இல்லாமல் எழுதுவதற்கு சில பயிற்சிகளும், நூற்பாக்களும் கொடுக்கப்பட்டுள்ளன. அவை போதுமானவையாக இல்லை. போட்டித் தேர்வுகளில் சந்திப்பிழை இல்லாத தொடரைத் தெரிவு செய்யும் வகையில் வினாக்கள் கேட்கப்படுகின்றன. எனவே சந்திப்பிழைகள் இல்லாமல் எழுதுவதற்குரிய இலக்கண விதிகள், காரண காரியத் தொடர்புகள், இவைகுறித்த அறிஞர்களின் விளக்கங்கள் ஆகியவற்றைக் கற்பிப்பது அவசியமாகிறது.

**5. ஆய்வின் நோக்கங்கள்**

1. வல்லொற்று மிகுமிடங்களையும் வல்லொற்று மிகாவிடங்களையும் அறிந்து கொள்ளல்

2. இல்லகண நூற்பாக்களையும் காரண காரியத் தொடர்புகளையும் அறிஞர்களின் விளக்கங்களையும் அறிந்து கொள்ளல்

3. பிழையில்லாமல் எழுதக் கற்றுக் கொள்ளல்

**6. ஆய்வு முறைகள்**

இவ்வாய்வில் விதிவிளக்கு முறையில் வல்லொற்று மிகுமிடங்களையும், வல்லொற்று மிகாவிடங்களையும் கற்பிக்கத் தீர்மானிக்கப்பட்டது. மேலும் காரண காரியத் தொடர்பு, அறிஞர்களின் விளக்கங்கள் ஆகியவற்றைக் கூடுதலாக தருவதென முடிவு செய்யப்பட்டது. முன்தேர்வு, பின்தேர்வு, மதிப்பெண் சராசரி மூலம் மாணவர்களின் அடைவை மதிப்பிடுவது எனத் தீர்மானிக்கப்பட்டது.

### 7. ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டோர்

தென்காசி மாவட்டம், மேலநீலிதநல்லூர் ஒன்றியத்திலுள்ள கூவாச்சிபட்டி அரசு உயர்நிலைப் பள்ளியைச் சார்ந்த மாணவ மாணவியர் 32 பேர்.

### 8. ஆய்வு முடிவு

முன்தேர்வில் குறைந்த மதிப்பெண் எட்டாகவும் அதிக மதிப்பெண் எண்பதாகவும் இருந்தது. பின்தேர்வில் குறைந்த மதிப்பெண் நாற்பதாகவும் அதிக மதிப்பெண் நூறாகவும் இருந்தது. பின்தேர்வில் எட்டு மாணவர்கள் தொண்ணூறு விழுக்காட்டிற்கு மேல் மதிப்பெண் பெற்றிருந்தனர். முன்தேர்வில் வகுப்பில் உள்ள மொத்த மாணவர்களின் சராசரி மதிப்பெண் ஐம்பது விழுக்காடாக இருந்தது. பின்தேர்வில் வகுப்பில் உள்ள மொத்த மாணவர்களின் சராசரி மதிப்பெண் எழுபத்து ஒன்பது விழுக்காடாக இருந்தது. எனவே இவ்வாய்வு பயனுடையதாக அமைந்தது.

### 9. ஆய்வுச் சுருக்கம்

ஒன்பதாம் வகுப்பு மாணவர்களுக்கு விதி விளக்கு முறை மூலம் கற்பிப்பதன் வாயிலாகச் சந்திப்பிழை இல்லாமல் எழுதும் திறனை மேம்படுத்துவதற்காக இச்செயலாய்வு மேற்கொள்ளப்பட்டது. ஐந்து நாள்கள் வல்லினம் மிகுமிடங்கள் அறுபது பற்றியும் வல்லினம் மிகாவிடங்கள் ஐம்பத்தேழு பற்றியும் கற்பிக்கப்பட்டுப் பயிற்சிகள் கொடுக்கப்பட்டன. முன்தேர்வு, பின்தேர்வு, மதிப்பெண் சராசரி ஆகியவை மூலம் ஆய்வினால் விளைந்த பயன்கள் மதிப்பிடப்பட்டன. விதிவிளக்கு முறை, காரண காரியத்தொடர்பு முறை, அறிஞர்களின் விளக்கங்கள் ஆகியவற்றின் மூலம் பயிற்சி அளித்ததன் வாயிலாக சந்திப்பிழை இல்லாமல் எழுதும் திறன்

மேம்படுவது இவ்வாய்வின் மூலம் உறுதி செய்யப்பட்டது. இதன் மூலம் மாணவர்கள் பயனடைந்தனர். தொடர்ந்து இச்செயல்பாடுகளைப் பின்பற்றி மாணவர்களுக்குப் பயிற்சி அளிக்குமாறு இப்பள்ளியின் தமிழாசிரியர்களிடம் கேட்டுக் கொள்ளப்பட்டது.